ISBN:978-81-687272-5-0

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



ஜெகவீர பாண்டியனார்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/56.%20%E0%AE%9A%E0%AF%86%E0%AE%95%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

ஜெகவீரபாண்டியனார் (1886-1967)



ஜெகவீரபாண்டியனார் (1886-1967)

கல்வி கற்க முடியாத சூழல் வாட்டியபோதிலும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை தாயுமானவர் பாடல் முதலான நூல்களையும் வேதாந்த நூல்களயும் ஆங்கில மொழியையும் தாமாகவே படித்துப் புலமை பெற்றவர்.19ம் வயதிலேயே "ஆசிரியர்" நிலைக்கு உயர்ந்தவர். நாநலம் மிக்கவர். சிறந்த புராணச் சொற்பொழிவாளர். தமது இல்லத்திற்குத் "திருவள்ளுவர் நிலையம்" என்றும், தாம் தொடங்கிய அச்சகத்திற்கு "வாசுகி அச்சகம்" என்றும் பெயரிட்டவர். தம்நூலில் ஓரிடத்திலும் அச்சுப்பிழை வாராமல் பார்த்துக் கொண்டவர்.. மாசிலா மணிமாலை , அணி அறுபது , தருமதீபிகை, திருக்குறட் குமரேச வெண்பா ,வீரபாண்டியம், இந்தியத் தாய்நிலை , உலக

உள்ளங்கள், கம்பன் கலைநிலை, அகத்திய முனிவர் , கவிகளின் காட்சி, தமிழர் வீரம் , பாஞ்சாலங் குறிச்சி வீரசரித்திரம் போன்ற பல நூல்களை எழுதியவர். "திருக்குறட் குமரேச வெண்பா" என்ற நூலில் ஒவ்வொரு குறளுக்கும் அதற்கேற்றவாறு கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் குறளோடு மேலும் இரண்டு அடிகள் சேர்த்து முழு வெண்பாவாகப் பாடியதோடு அதற்கான முழு விளக்கத்தையும் தந்தவர்.

கவிராச பண்டிதர் (10.3.1886 - 17.6.1967) எனப் போற்றப்பட்ட செகவீரபாண்டியனார் தென்னகத்தில், கோயில்பட்டிக்கும் திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட ஊர் மணியாச்சி. இவ்வூருக்கு அருகில் உள்ளது ஒட்டநத்தம். இதை "சின்னப் பாஞ்சாலங்குறிச்சி" என்றும் கூறுவர். இவ்வூரில் வீரபாண்டிய கட்டபொம்மன் வழிவந்த குடும்பத்தில் தோன்றிய பெருமாள்சாமி என்பவருக்கும் ஆவுடையம்மைக்கும் 10.3.1886 ல் பிறந்தவரே கவிராசபண்டிதர் செகவீரபாண்டியனார். 17.6.1967 ல் நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்டு, மருத்துவம் பலனின்றி இறைவனடி சேர்ந்தார். செகவீர பாண்டியனார் தம் 27 ஆம் வயதில் வெள்ளைத்தாய் என்னும் மங்கையை வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். தென்பாண்டி நாட்டில் பல ஊர்களுக்கும் சென்று சொற்பொழிவு ஆற்றி வந்தார். ஆனாலும் இத்தகைய பேச்சுகள் பயனின்றிப் போகும் என்று உணர்ந்தவர், நூல் எழுதுவதே தக்க பணி என்று எண்ணினார்.

மதுரை மேலமாசி வீதியில் தங்கி, தாம் வசித்த இல்லத்திற்குத் "திருவள்ளுவர் நிலையம்" என்றும், தாம் தொடங்கிய அச்சகத்திற்கு 'வாசுகி அச்சகம்' என்றும் பெயரிட்டார். அச்சுக் கோர்ப்பது முதலான பணிகளைத் தாமே செய்தார். பாண்டியனார் கவி புனைவதில் வல்லவர். பெரும்பாலும் பாடல்கள் இயற்றும் புலவர்கள் அப்பாடல்களுக்கு உரை எழுதுவதில்லை; பின்னால் வரும் புலவர்களே எழுதியுள்ளனர்.

கவிராஜ பண்டிதர் செகவீர பாண்டியனார் 1330 குறட்பாக்களையும் வைத்து மேலே இரண்டடியில் திருக்குறளின் கருத்துகளுக்குப் பொருத்தமான சரிதங்களை இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களிலிருந்தும், சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலிருந்தும் சேர்த்து, பொருத்தமான விரிவுரை (மாபாடியம்) செய்திருக்கிறார்.

கவிராஜ பண்டிதர் செகவீர பாண்டியனார், 'மனிதன் நிலை முதல் அதிகாரமாக, வீடு என்ற தலைப்பை நூறாவது அதிகாரமாக வைத்து,' 100 அதிகாரங்களில், அதிகாரத்திற்குப் 10 பாடல்கள் வீதம் தரும தீபிகை என்ற நூலும், 60 பாடல்கள் கொண்ட அணியறுபது என்ற நூலும், கம்பன் கலைநிலை என்ற உரைநடை நூலும், பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் என்ற நூலும் எழுதியிருக்கிறார்.

தரும தீபிகை

தரும தீபிகை என்னும் இந்நூல் அருமையான பல உறுதி நலங்களை யுடையது. இந்நிலவுலகில் நிலவுகின்ற பலகோடி உயிரினங்களுள் மனிதன் மிகவும் தலைசிறந்து நிற்கின்றான். அந்நிலை உணர்வொளியால் நன்கு உறுதி பெற்றுள்ளது. தன் கண் எதிரே காணாதவற்றையும் கருதி யுணருங் திறம் மனித வுருவில் மருவி யிருக்கின்றது.

சென்றதையும் நிகழ்வதையும் எதிர்வதையும் எண்ணி ஆராய்ந்து நுண்ணிய கருமங்கள் செய்து புண்ணியங்கள் புரிந்து புனித நிலையை அடைய மனிதன் இனிது முயல்கின்றான். முயன்றும் கருதியது கை கூடாமல் மறுகியுழல்கின்றான். இன்பமே விரும்பும் இயல்புடைய மக்கள் துன்பமடைந்து துடித்தயர்கின்றனர். அதற்குக் காரணம் வினை என விளம்பி வெருண்டு நிற்கின்றார்.

வினை என்பது மனம் மொழி மெய் என்னும் மூன்று நிலைகளில் தோன்றி விளைகின்றது. இம் முக்கரணங்களும் நன்மையில் படிந்துவரின் நல்வினையாம்; தீமையில் தோய்ந்துவரின் தீவினையாம், நல்வினை இன்பம் பயக்கும்; தீவினை துன்பம் விளைக்கும்.

ஆகவே இன்பம் வேண்டுவோர் துன்ப மூலங்களான தீய வினைகளை யாண்டும் தீண்டலாகாது. தூய செயல்களையே தொடர்ந்து பழகி வர வேண்டும். ஒருவனுடைய கருமம் புனிதமானால் அவன் கருமவானாய்த் தழைத்து இருமை இன்பங்களையும் எளிதே

எய்துகின்றான். இத்தகைய விதிவிலக்குகளை விளக்கி உயிர்களை உத்தம நிலையில் உய்த்தலால் அற நூல்கள் உயிர்க்கு உறுதியான உயர்நூல்களாக மதிக்கப்பட்டுள்ளன.

பெறுதற்கு அரிய சிறந்த மக்கட் பிறவியை அடைந்தும் இப்பேற்றின் அருமையை மறந்து வெம்மை நெறிகளில் உழந்து புன்மை புரிந்து தவிக்கும் மனுக்குலத்திற்கு இனித்த முறையில் செய்யும் திறங்களை விளக்கி உய்யும் வகைகளை யுணர்த்திக் கால நிலைகளுக்கு ஏற்ப நூல்கள் பல தோன்றி வருகின்றன.

அற நூல்களும் நீதி நூல்களும் பண்டு தொட்டே நமது தமிழ் மொழியில் மிகவும் பெருகி வந்துள்ளன. ஆயினும், இந்நூல் இனியவளஞ் சுரந்து புதிய மணங் கமழ்ந்து அரிய நலங்கள் பல மலிந்து புத்தொளி மிகுந்து தத்துவ நோக்குடன் தலை சிறந்துள்ளது. இவ் வுண்மையை எவரும் இதனுள் உய்த்துணர்ந்து கொள்ளலாம். உணர்வின் அளவு உண்மை தெளிவாகி வருகிறது.

இந்த நூல் விளைந்து வந்த நிலையை எண்ணுந்தோறும் என் உள்ளம் இன்பமீதுார்கின்றது. திருக்குறட் குமரேச வெண்பா என்னும் அரிய பெரிய நூலை நான் எழுதி முடித்தபின் என் கருத்துள் தோன்றிய எண்ணங்களை ஒரு புண்ணிய நூலாகப் புனைந்து வந்தேன். மேற்குறித்த பெரு நூலை வெளியிடுங்கால் இதிலிருந்து சில பாடல்கள் அதனிடையே வெளி வர நேர்ந்தன. அவற்றைக் கண்ட அறிஞர் பலர் ஆர்வமுடன் உவந்து பாராட்டி நூல் முழுவதும் வேண்டும் என விழைந்து எழுதினர். ஏறக் குறையப் பத்தாண்டுகளாக இடையிடையே அந்த எழுத்துக்கள் அழுத்தமாய் வந்து கொண்டிருக்கின்றன. அந்த அன்பர்களுடைய உரிமையான வேண்டுகோள்களே இது பொழுது இந்நூல் உரையுடன் வெளி வருதற்குத் தூண்டுகோல்களாயின.

அற நலங்களை யுணர்த்தி அறிவொளி பரப்பி அறியாமையாகிய அக இருளை நீக்கி யாண்டும் உயர்வருளும் இயல்பினது ஆதலால் இது தரும தீபிகை என வந்தது. மனிதனிலை, உடல்நிலை, மனநலம்,

இனநலம், சீர்மை, சீலம் முதலிய நூறு அதிகாரங்களை யுடையது. அதிகாரம் தோறும் பத்துப் பாக்கள் அமைந்தது.

இந்நூல் முழுவதும் நேரிசை வெண்பாவால் நிறைந்துள்ளது. கவிகளெல்லாம் நெளிவும் தெளிவும் உடையனவாயினும் கருத்துக்களின் அருமை பெருமைகளை அழகுற உணர்த்தி உள்ளுறை நயங்களைத் தெள்ளிதின் விளக்கிக் கலைநலங்கள் கனிந்துள்ளமையால் இவ்வுரை எல்லார்க்கும் இதமாய் இனிமை பயந்து வருமென்று நம்புகின்றேன்.

இந்நூலும் உரையும் ஞாலம் இன்புற நலம் பல தந்து என்றும் நின்று நிலவும்படி எம்பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து நிற்கின்றேன்.

(😊)(😊) @@@@@@@@@@@ (😊)(😊)

கவிராஜ பண்டிதர் செகவீர பாண்டியனார்

https://www.tamilvu.org/ta/library-nationalized-html-naauthor-37-235692

கவிராஜ பண்டிதர் செகவீர பாண்டியனார்

அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

01. அகத்திய முனிவர்

02. அணியறுபது

03. கம்பன் கலை நிலை உரைநடை தொகுதி-1

04. கம்பன் கலை நிலை உரைநடை தொகுதி-2

05. கம்பன் கலை நிலை உரைநடை தொகுதி-3

06. கம்பன் கலை நிலை உரைநடை தொகுதி-4

07. கம்பன் கலை நிலை உரைநடை தொகுதி-5

08.

இலக்கிய வாழ்க்கை

ஜெகவீரபாண்டியன் அறம், பக்தி, திறனாய்வு, வரலாறு, மொழி போன்ற துறைகளில் பல நூல்களை எழுதினார். வள்ளுவரையும், கம்பரையும் தனது வாழ்க்கை வழிகாட்டியாகக் கொண்டு செயல்பட்டார். மதுரையில் உள்ள தனது இல்லத்திற்கு 'திருவள்ளுவர் நிலையம்' என்றும், தாம் தொடங்கிய அச்சகத்திற்கு 'வாசுகி அச்சகம்' என்றும் பெயரிட்டார். யாரையும் தனக்கு உதவியாளாக வைத்துக் கொள்ளாமல் அச்சுக் கோர்ப்பது முதல், பிழைத்திருத்தம் செய்து அச்சிடுவது வரை அனைத்துப் பணிகளையும் தாமே செய்தார்.

ஜெகவீரபாண்டியன் 30-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதினார். தனது நூல்கள் சிலவற்றைத் தானே பதிப்பித்தார்.

- வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் ஊமைத்துரையின் வரலாற்றைக் கூறும் நூல் 'பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்'
- கட்டபொம்மனின் வரலாற்றை 8,811 விருத்தப் பாக்களால் கூறும் காவியம் 'வீரபாண்டியம்'.
- 'இதற்கு இது' எனக் கூறும் அறுபது பாடல்கள் கொண்ட சிறு நூல் 'அணியறுபது'.
- 'இந்தியத் தாய் நிலை' இந்தியாவின் அவல நிலைக்கு இரங்கி ஜெகவீரபாண்டியன் பாடிய தனிப்பாடல்களின் தொகுப்பு.
- ஆங்கிலப் பேரறிஞர்களின் பொன்மொழிகளும் அவற்றிற்கு இணையான தமிழ் மொழி பெயர்ப்புக் குறட்பாக்களும் கொண்ட நூல் 'உலக உள்ளங்கள்' .
- 'தரும தீபிகை' ஒவ்வொரு தலைப்பிலும் பத்து வெண்பாக்களாக அறநெறியை விளக்கும் நூல்
- கம்பராமாயணத்தில் வரும் பாத்திரங்களின் குணச் சித்திரங்களை விளக்கும் நூல் 'புலவர் உலகம்',

சொற்பொழிவு

கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம், வில்லிபாரதம், திருவிளையாடல் புராணம் போன்றவற்றை முழுமையாகப் பயின்று தேர்ந்த ஜெகவீரபாண்டியன், அவை பற்றிப் பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். தொடர் சொற்பொழிவு, தனிச் சொற்பொழிவு, வானொலிச் சொற்பொழிவு, அயல் மாநிலச் சொற்பொழிவு என்று பல வகையில் இவரது சொற்பொழிவுகள் அமைந்தன.

புராணத் தலைப்புகளில் மட்டுமல்லாமல் 'தசரதன் தன்மையும் கைகேயியின் வன்மையும்', 'பரதன் பண்பும் குகன் பண்பும்', 'சீதை நெஞ்சமும் இராவணன் வஞ்சமும்', 'தமிழர் வீரம்', 'மன நலமும் மனிதனும்', 'திருவாசகத்தில் ஒரு வாசகம்', 'காந்திவ

புலனடக்கம்', 'கவிதை விளக்கம்', 'வில்லியாழ்வாரின் சந்த கவித்திறம்' போன்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றினார்.

விருதுகள்

- கவிச்சக்கரவர்த்தி
- கவிராஜ பண்டிதர்
- கவிஞர் மாமணி
- தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு
- தமிழக அரசின் பரிசு - பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் நூலுக்கு.
- மதுரை தமிழ்ச் சங்கப் பாராட்டு
- கரந்தை தமிழ்ச் சங்கப் பாராட்டு
- மதுரை ஆதினம் அளித்த, 'தமிழ் மாமுனி' பட்டம்.

கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் பாடிய நகைச்சுவைப் பாடல்

https://rammalar.wordpress.com/2021/07/05/%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%9C-%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%B0%E0%AF%8D-%E0%AE%9C%E0%AF%86%E0%AE%95%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0-%E0%AE%AA/

அண்மைக்காலம் வரையில் தென்பாண்டி மண்டலத்தில் வாழ்ந்த கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனாரின் காபியைப் பற்றிய பாடல், காலையும் மாலையும் நம் கண் முன்னே வந்து நிற்கக்கூடியது.

'பாலில் தண்ணீரைக் கலக்குகிறார்களா அல்லது தண்ணீரில் பாலைக் கலக்குகிறார்களா எனத் தெரியாத அளவுக்குக் கலப்படம் நடக்கிறது. பொருளில்தான் கலப்படம் என்றில்லை. அளக்கின்ற போதும் பக்காபடிக்கு முக்கால்படியாகப் பயமில்லாமல் அளந்து போடுகிறார்கள். அந்தப் பாலை வாங்கி வந்து, அதில் மதுவைப் போல் தீங்கைத் தருகின்ற காபி பவுடரைக் கலந்து, நேருக்கு நேராகக் குடிக்கின்றார்கள். இந்தக் குடியினால் வரக்கூடிய தீங்குகளை எண்ணிப் பாராமல் குடிக்கின்றார்கள்".


இந்தப்பாடலில் காணப்படும் தில்லுமுல்லு, தீங்குகளும் நம்மைத் திருத்தவில்லை என்றாலும், பட்டவர்த்தனமாக அதனைப் படம்பிடித்த பாங்கு நம் இதழ்களை விரியச் செய்கின்றது. பாடல் வரிகள் வருமாறு:

'படிக்குநேர் படியாகப் பாலிலே
நீர் கலந்து பயம் ஒன்று இன்றி
அடிக்குநேர் அடியாக அளவிலுமே
களவாகி ஆர்த்து விற்பார்
பிடிக்குநேர் பிடியாக அதைவாங்கிக்
காபியெனும் மதுவுள் பெய்து
குடிக்குநேர் குடியாகக் குடிக்கின்றார்
குடிகேடு குறியார் கூர்ந்தே"

நவரசங்களில் தலையாயது நகைச்சுவையாகும். அதனால்தான் அதனைத் தொல்காப்பியர் முதலாவதாக வைத்தார். மற்ற சுவைகள் மற்றமற்ற மொழிகளுக்கே கைகூடி வந்தனவே தவிர, நகைச்சுவை வரவில்லை. தமிழுக்கும் வடமொழிக்கும்தாம் அந்தப் பேறு கிட்டியது.

வீரத்தைப் பற்றிய பாடல்களைப் படிக்கும்போது, நம் தோள்கள் தினவு எடுப்பதில்லை; அவலத்தைப் பற்றிய பாடல்களைப் படிக்கும்போது நம் கண்கள் கண்ணீர் சிந்துவதில்லை; ஆனால், நகைச்சுவை ததும்பும் பாடல்களைப் படிக்கும்போது மனது சிலிர்க்கின்றது; உதடுகள் புன்முறுவல் பூக்கின்றன. ●


பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் (பாகம் - 1)



இந்திய சுதந்திரத்துக்கு முதன்முதலில் வித்திட்டவர் வீரபாண்டிய கட்டபொம்மன். அவரது சரித்திரத்தை மக்கள் காலங்காலமாக தங்கள் கலை வடிவமான நாட்டுப்புறப் பாடல்கள், நாடகங்கள் மூலம் ஞாபகப்படுத்திவந்த நிலையில், அதை இலக்கியமாக்கிய பெருமை பண்டிதமணி ஜெகவீரபாண்டியனாரையே சாரும். வீரபாண்டிய கட்டபொம்மனை திரைப்பட அளவிலும், சிறிய குறிப்புகளுடனான வரலாற்று நூல்கள் அடிப்படையிலும் மட்டுமே அறிந்த நமக்கு, ஆதி முதல் அந்தம் வரை கட்டபொம்மனின் வரலாற்றை அறிய இந்தநூலைப் படிப்பது

அவசியமாகும். ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகம் வந்த கட்டபொம்மனின் முன்னோர், கட்டபொம்மன் ஜமீன் ஆன கதை, அவரது வீரச்செயல்கள், அவர் ஆங்கிலேயரை எதிர்க்கவேண்டிய கட்டாயச் சூழல், ஆங்கிலேயரின் சூழ்ச்சிகளுக்கு இடையே, அண்டை ஜமீன்களின் துரோகத்துக்கு ஆளாகி தூக்குத்தண்டனையை முத்தமிட்ட நிலை என அனைத்தையும் காவிய வடிவில் காட்சிப்படுத்தியிருக்கிறார் ஜெகவீரபாண்டியனார்.

திருக்குறட் குமரேச வெண்பா முதல் பாகம்




இன்பங்களுக்கு உறுதுணையாய் அமர்ந்து பொருள் புரிந்த அரும் உயர்கலன்களை நூல்கள் பலவும் புகழ்ந்து கூறியுள்ளன. புண்ணியம் புகழ்யாவும் பொருளினால் என மேவியுள்ளமையால் இதன் ஒவிய தெரியவாகும். பொருள் என்றது பொன் மணி ரெஸ் முதலிய செல்வங்ரை, உயிர் வாழ்க்கைக்கு உயர். ஆதாரமாயுள்ள இப்பொருளை ஈட்டிக், காத்து,சந்து, துய்த்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நிலை வான்முறையே கடந்துவா அரசுரினம அமைந்தது. இனத்துக்குத் தலைவனுய் உலகத்தைப் பாதுகாத்துயாவர்க்கும் ஆகாவு புரிந்துவரும் அரசுக்கு என்வாய் பொருள்களும் தனி உலமையாயின. ஆகவே அவன் கருவிலே திருவுடையனாய்ப் பெருமைமிகப் பெற்றன். அவனது மகிமை காணவே அமைதி காணலாம் ஆதலால் அரசாட்சி.

திருக்குறளுக்கு தற்காலத்தில் சிறந்த உரைநூல்

இதோ!

https://tamilandvedas.com/tag/%E0%AE%9C%E0%AF%86%E0%AE%95%E0%AE%B5%E0%AF%80%E0%AE%B0-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D/



திருக்குறளுக்கு தற்காலத்தில் சிறந்த உரைநூல் இதோ!

ச.நாகராஜன்

1

கவிராஜ பண்டித ஜெகவீர பாண்டியனார் நமது சம காலத்தில் வாழ்ந்த சிறந்த தமிழ் அறிஞர்; தமிழ்ப் புலவர். மணியாச்சிக்கு அருகில் உள்ள ஒட்டநத்தம் என்ற ஊரில் 10-3-1886இல் இவர் பிறந்தார்.

தமிழின் பால் அளவற்ற ஈடுபாடு கொண்ட இவர் மதுரையில் மேலமாசி வீதியில் வாழ்ந்து வந்தார்.

திருவள்ளுவர் பால் அளவற்ற ஈர்ப்பு கொண்ட இவர் தனது இல்லத்திற்கு திருவள்ளுவர் நிலையம் என்றே பெயரைச் சூட்டினார்.

தனது நூல்களைப் பதிப்பிக்க தனது அச்சகம் ஒன்றை உருவாக்கினார். அதற்குப் பெயர் வாசுகி அச்சகம். அந்தக் காலத்தில் கம்போஸிங் எனப்படும் அச்சுக் கோர்ப்பிற்கு எழுத்து அச்சுக்களை எடுத்துக் கோர்க்க வேண்டும். அதையும் இவரே செய்தார். இவரது மகன்களையும் அந்தப் பணியில் ஈடுபடுத்தினார்.

அற்புதமான தமது நூல்களைத் தானே பதிப்பித்தார்.

கவிராஜ பண்டிதரை உரிய முறையில் தமிழகம் பாராட்டவில்லை என்பதே என் தனிப்பட்ட கருத்து. 17-6-1967இல் அவர் மறைந்தார்.

அந்தக் காலத்தில் எனது தந்தையார் மறைந்த தினமணி பொறுப்பாசிரியர் திரு வெ.சந்தானம் புத்தகங்களைப் பணம் கொடுத்து வாங்கிப் படிப்பது வழக்கம். அவருடன் புத்தகம் வாங்கச் செல்கிறார் என்றால் தவறாமல் நானும் கூடவே செல்வது வழக்கம். டவுன்ஹால்ரோடில் உள்ள பாரதி புத்தக நிலையத்தில் உரிமையாளரான திரு சுவாமிநாதன் கல்லாவில் அமர்ந்திருப்பார். நாங்கள் உள்ளே சென்றவுடன் அன்பான வரவேற்பு இருக்கும். புத்தகங்கள் அனைத்தும் தெரிவு செய்யப்பட்டவுடன் அவற்றை அடுக்கிக் கட்டி வீட்டுக்கு அனுப்பி விடுவார் பில்லுடன். பணத்தை கடையிலிருந்து புத்தகத்தைக் கொண்டு வருபவர் வாங்கிக் கொள்வார்.

இப்படி ஆயிரத்தி தொள்ளாயிரத்து அறுபதுகளில் ஒரு நாள், பாரதி புத்தக நிலையத்திலிருந்து திரும்பி வரும் போது மேலமாசி வீதியில் ஒரு வீட்டிற்குள் நுழைந்தார் என் தந்தையார். யார் வீடு என்று நான் கேட்ட போது, 'உள்ளே வந்து பார்' என்றார்.

உள்ளே எங்களை அன்புடன் வரவேற்றவர கவிராஜ பண்டித ஜெகவீரபாண்டியனார்.

நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவரது அச்சகத்தைக் காண்பித்தார். எளிமையான தமிழ் அறிஞர். மடை திறந்த வெள்ளம் போல் தமிழ் செய்யுள்களும், கருத்துக்களும் பாய்ந்து வந்ததைப் பார்த்து பிரமித்தேன். வழக்கம் போல புத்தகக் கட்டு ஒன்று உருவானது. அதை அவரே வீட்டிற்கு அனுப்பி வைத்தார். பணமும் தரப்பட்டது.

அந்தப் புத்தகங்களைப் படித்த போது தமிழ்க் கடலின் விஸ்தீர்ணம் ஓரளவு புலப்பட்டது. அவரது அறிவின் ஆழத்தை அளக்கவே முடியாது என்றும் தோன்றியது.

அந்தப் புத்தகங்களுள் ஒரு குறிப்பிடத் தகுந்த புத்தகம் திருக்குறட் குமரேச வெண்பா.

இன்றளவும் அந்தத் தொகுதிகள் எனக்குத் துணையாக இருந்து வருகின்றன.

திருக்குறட் குமரேச வெண்பா என்பது 1330 குறட்பாக்களுக்கு ஒரு விரிவுரை. இது புதுமையான ஒரு விரிவுரை. ஒவ்வொரு குறளுக்கும் ஒரு சரிதம் உண்டு. 1330 குறட்பாக்களுக்கு 1330 நேரிசை வெண்பாக்கள். தெய்வ வணக்கமும் அவையடக்கமும் சேர்த்து மொத்தம் 1332 நேரிசை வெண்பாக்கள்.

அவர் நூலின் முகவுரையில் (7-8-1938 தேதியிட்ட பதிப்பு இது) குறிப்பிடுவது இது:-

"தெய்வப் புலமைத் திருவள்ளுவப் பெருந்தகை அருளியுள்ள திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமான சரிதங்களை இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களினும், காந்தம், பாகவதம் முதலிய புராணங்களினும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களினும், வேறு பல நூல்களினும் இருந்து தெரிந்து எடுத்து எமது குலதெய்வமாகிய குமரேசனது முன்னிலையில் விண்ணப்பித்து அவற்றிற்கு விடை கூறும் முறைமையில் குறள்களை உதாரணமாக எடுத்துக் காட்டி இற்றைக்கு மூன்று வருடங்கட்கு முன்னரே இந்த நூலை முடித்து வைத்தும் வெளிப்படுத்தக் கூசி விலகி இருந்தேன். இங்ஙனம் இருப்ப, அறிஞர் பலர் இந்நூலுட் சில பாக்களைக் கேட்டு மகிழ்ந்து இதனை அச்சில் ஏற்றி அனைவருக்கும் உபகரிக்க வேண்டும் என்று என்பால் அன்பால் என்னைத் தூண்டினர். அன்னார் வேண்டுகோளைச் சிரமேற் கொண்டு இது பொழுது இதனை வெளியிடுகின்றேன்.விழுமிய உரையுடன் கெழுமித் தெளிவாய் வெளி வருகின்றது."

சரிதங்களைக் குறட்பாவில் அமைத்துத் திருக்குறள்களோடு இணைத்துத் தனிச்சீரும் சேர்த்து அமைக்கப்பட்ட இந்த வெண்பாக்களைப் படிப்பதே ஒரு சுகானுபவம். 1-1-1957இல் இந்த நூல் மூன்றாம் பதிப்பைக் கண்டது.

முதல் குறளுக்கான அவரது குமரேச வெண்பா இது:-

பூவுலகோ டெங்குமேன் பூண்ட துமைகேள்வன்

கோமுகித்த தன்மை குமரேசா – மேவும்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு

இதற்கான விரிவுரையை அவரே மிக அழகுறத் தெளிவாகத் தருகிறார்.

நீத்தார் பெருமை அதிகாரத்தில் வரும் முதல் குறளுக்கான குமரேச வெண்பா இது:-

மண்டு புகழ் மாணிக்க வாசகரின் மாண்பினை நூல்

கொண்டு புகவ் வானேன் குமரேசா – கொண்ட

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து

வேண்டும் பனுவல் துணிவு

மாணிக்கவாசகரது பெருமையை நூல்கள் ஏன் உவந்து புகழ்கின்றன? எனில், ஒழுக்கத்து நீத்தார் பெருமை பனுவல் துணிவு விழுப்பத்து வேண்டும் என்க.

விரிவுரையில் பொருத்தமாக மாணிக்கவாசகர் சரிதம் தரப்படுகிறது.

சில குறள்களுக்கு நான்கு சரிதங்கள் கூடத் தரப்படுகின்றன.

அருமையான இந்த நூல் தற்காலத்திற்கேற்றபடி எளிய தமிழில் அழகிய எடுத்துக் காட்டு கதைகளுடன் தரப்பட்டுள்ளதால் இதுவே காலத்திற்கேற்ற நாம் படிக்க வேண்டிய திருக்குறள் விரிவுரை என்பதை அறுதியிட்டு உறுதி கூறலாம்.

சற்று யோசனை செய்து பார்த்தால் வியந்து போவோம். 1330 குறளுக்கும் பொருத்தமான கதையை புராண, இதிஹாச, இதர நூல்களிலிருந்து எடுத்து ஒரு நேரிசை வெண்பாவில் முதல் இரண்டு அடிகளில் அடக்கி அதற்குரிய குறளை கீழ் இரண்டு அடிகளில் தருவது என்றால் அது சாமானிய செயலா, என்ன! இறைவன் திருவருளும் திருவள்ளுவரின் ஆசியுமே காரணம் எனலாம்,

கண்ட உரைகளைப் படிக்காமல் திருக்குறளுக்கான சரியான உரை இதுவே. இதை அன்பர்கள் கண்டிப்பாகப் படித்துப் பயன் பெற வேண்டும்.

கவிராஜ பண்டிதரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டதால் அவற்றை இணையதளத்திலிருந்து, இலவசமாக, தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அன்பர்கள் தவறாது இந்த நூலைப் படிக்க வெகுவாக நான் பரிந்துரை செய்கிறேன்.

கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார்

நினைவு நாள்

https://www.peopletoday.page/2022/06/blog-post_38.html

கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் நினைவு நாள் ஜூன் 17, 1967 இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒட்டபிடாரம் என்னும் சிற்றூரில் பிறந்தவர். கட்டபொம்மன் வழிவந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். முத்துக்கவிராயர் என்பவரிடம் முறையாக இலக்கண, இலக்கியங்களைக் கற்றவர். சிறந்த புராண சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர். கவிதை, உரைநடை, மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு வடிவங்களில் நூல் எழுதியவர்

கல்வி கற்க முடியாத சூழல் வாட்டியபோதிலும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை தாயுமானவர் பாடல் முதலான நூல்களையும் வேதாந்த நூல்களயும் ஆங்கில மொழியையும் தாமாகவே படித்துப் புலமை பெற்றவர்.19ம் வயதிலேயே "ஆசிரியர்" நிலைக்கு உயர்ந்தவர். நாநலம் மிக்கவர். சிறந்த புராணச் சொற்பொழிவாளர். தமது இல்லத்திற்குத் "திருவள்ளுவர் நிலையம்" என்றும், தாம் தொடங்கிய அச்சகத்திற்கு "வாசுகி அச்சகம்" என்றும் பெயரிட்டவர்.

தம்நூலில் ஓரிடத்திலும் அச்சுப்பிழை வாராமல் பார்த்துக் கொண்டவர்.. மாசிலா மணிமாலை , அணி அறுபது , தருமதீபிகை, திருக்குறட் குமரேச வெண்பா ,வீரபாண்டியம், இந்தியத் தாய்நிலை , உலக உள்ளங்கள், கம்பன் கலைநிலை, அகத்திய முனிவர் , கவிகளின் காட்சி, தமிழர் வீரம் , பாஞ்சாலங் குறிச்சி வீரசரித்திரம் போன்ற பல நூல்களை எழுதியவர். "திருக்குறட் குமரேச வெண்பா" என்ற நூலில் ஒவ்வொரு குறளுக்கும் அதற்கேற்றவாறு கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் குறளோடு மேலும் இரண்டு அடிகள் சேர்த்து முழு வெண்பாவாகப் பாடியதோடு அதற்கான முழு விளக்கத்தையும் தந்தவர்.

பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்

ஆசிரியர்: ஜெகவீரபாண்டியனார்

தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றைப் பேசும் மூல நூல்.

https://tamilbookspdff.blogspot.com/2025/10/blog-post_74.html

நூலின் அடிப்படை விவரங்கள்

நூல் வகை: சரித்திரம் / வரலாறு (History / Biography)

ஆசிரியர்: ஜெகவீர பாண்டியனார் (Jagaveerapandianar)

பதிப்பாளர்: கு. பூபதி (தோழமை வெளியீடு)

முதற்பதிப்பு: டிசம்பர் 2011 (தோழமை வெளியீடு)

பக்கங்கள்: 344

நூலின் மையக் கருத்து: கட்டபொம்மனின் வீரம்

இந்த நூல், தமிழ்நாட்டில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்துச் சண்டையிட்ட முதல் விடுதலை வீரர்களில் ஒருவரான **வீரபாண்டிய கட்டபொம்மனின்** வாழ்க்கையையும், அவரது ஆட்சிப் பகுதியான **பாஞ்சாலங்குறிச்சியின்** வீரமிகுந்த வரலாற்றையும் விரிவாகப் பேசுகிறது. பாளையக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்களுக்கு இடையேயான போராட்டங்கள், கட்டபொம்மனின் வீரம் செறிந்த உரையாடல்கள், சண்டைகள், மற்றும் அவரது மறைவு போன்ற முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை இது ஆவணப்படுத்துகிறது.

சரித்திர முக்கியத்துவம்:


இது வெறும் புனைவுக் கதை அல்ல; பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்களின் வரலாற்றை ஆதாரபூர்வமாகப் பதிவுசெய்யும் ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாகக் கருதப்படுகிறது.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில், தென்னிந்தியப் பாளையக்காரர்கள் ஆற்றிய தியாகங்களைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பும் ஆய்வாளர்களுக்கும், வாசகர்களுக்கும் இந்த நூல் ஒரு மூலப் புதையலாகும்.
கட்டபொம்மன் குறித்து எழுதப்பட்ட பல நூல்கள் மற்றும் திரைப்படங்களுக்குக் கூட இந்த நூலில் உள்ள தகவல்கள் ஒரு முக்கிய மூலமாகக் கருதப்படுகின்றன.

ஆசிரியரின் பங்களிப்பு:


ஆசிரியர் **ஜெகவீரபாண்டியனார்** என்பவர் பாஞ்சாலங்குறிச்சியின் சரித்திரத்தை ஆர்வத்துடன் தேடி, வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டி, வீர உணர்வுடன் இந்த

நூலை எழுதியுள்ளார். அவரது எழுத்து நடை, வாசகர்களை நேரடியாக அந்தச் சரித்திர நிகழ்வுகளுக்குள் இழுத்துச் செல்லும் வலிமை கொண்டது.











உ
சிவமயம்.
திருக்குறட் குமரேச வெண்பா.
(மூலமும் உரையும்.)

ஆசிரியர்
ஜெகவீரபாண்டியன்.

தூத்துக்குடி
வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது.

Copy right] 1924. [Registered.







படைப்புகள்

செகவீரபாண்டியனாரின் படைப்புகள் 2010-11 ஆம் ஆண்டில் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. தமிழ்நாடு அரசு இதற்கானப் பரிவுத் தொகையாக 6 இலகரம் (இலட்சம்) இந்திய ரூபாய்களை நல்கியது. இவரது படைப்புகளின் பட்டியல் வருமாறு:

வ.எண்	ஆண்டு	நூலின் பெயர்	பதிப்பாளர்	குறிப்பு(கள்)
01	1927	திருக்குறள் குமரேச வெண்பா[2]		8 தொகுப்புகள்
02		கம்பன் கவிநிலை உரைநடை		15 தொகுதிகள்
03		அகத்திய முனிவர்[1]		
04		வீரபாண்டியம்		பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான கட்ட பொம்மனைப் பற்றி வழங்கிவந்த வாய்மொழி இலக்கியங்களை எல்லாம் தொகுத்து எழுதப்பட்ட காவியம்

05		பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்		வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாறு (இரு பாகங்கள்)
06	1945	தமிழர் வீரம்[3]		
07		மாசிலாமணி மாலை[1]		
08		அணி அறுபது[1]		
09		தருமதீபிகை[1]		7 தொகுப்புகள்
10		இந்தியத் தாய்நிலை[1]		
11		வீரகாவியம்[1]		
12		கவிகளின் காட்சி தொகுதி-1[1]		
13		கல்வி நிலை[1]		

உ
சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா. 363

(மூலமும்—உரையும்.)

பொருட்பால் முதற்பாகம்.

ஆசிரியர்
ஜெகவீரபாண்டியன்.

நாத்துக்குடி
வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
விபவ-ஷு ஆவணி-மீ

 1928.

உ

கம்பன் கலை நிலை

ஆசிரியர்
ஜெகவீர பாண்டியன்

மதுரை,
மதுரை, ஸி. வரதராஜுலு நாயுடு பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

பங்குனிமீ

1941.

புலவர் உலகம்

கம்பன் கலை நிலை

ஒன்பதாவது தொகுதி

ஆசிரியர்
ஜெகவீர பாண்டியனர்

★

மதுரை
மதராஸ் ஸி. வரதராஜுலு நாயுடு பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது
1950

உ

வீர பாண்டியம்.

முதல் பாகம்

கவிராஜ
ஜெகவீரபாண்டியனர்
இயற்றியது.

மதுரை
மதராஸ். ஸி. வரதராஜுலு நாயுடு பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.
மன்மத ஞு சித்திரை மீ.


உ

அணியறுபது

மூலமும் — உரையும்

ஆசிரியர்
செகவீரபாண்டியனார்

மதுரை
வாசுகி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றன.
1964
All Rights Reserved.


உ

அகத்திய முனிவர்.

கவிராஜ பண்டிதர்
ஜெகவீரபாண்டியனவர்கள்
எழுதியது.

இரண்டாம் பதிப்பு.

மதுரை.
மதுரைஸ் C.வரதராஜுலுநாயுடு பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

All rights reserved] [Price Re. 1-0-0.

1940.

கல்வி நிலை' (Kalvi Nilai) என்பது தமிழ் அறிஞர் **செகவீரபாண்டியனார்** எழுதிய புகழ்பெற்ற தமிழ் நூலாகும். இந்நூல் கல்வியின் அவசியத்தையும், அறிவு மற்றும் கலைகளின் பண்புகளையும் மிக ஆழமாக ஆராய்கிறது. [1, 2]

நூல் பற்றிய விவரங்கள்:

- **ஆசிரியர்:** செகவீரபாண்டியனார்
- **பொருள்:** கட்டுரைகள் / கல்வி சிந்தனைகள்
- **பக்கங்கள்:** ஏறத்தாழ 104 பக்கங்கள் [1, 2, 3]

நூலின் முக்கிய அம்சங்கள்:

- அறிவு, நூல், கல்வி, கவி மற்றும் கவிஞன் ஆகிய ஐந்து அடிப்படைக் கருத்துக்களைப் பற்றி விரிவாக விவாதிக்கிறது.
- கலையின் பண்புகள் மற்றும் அவற்றின் சிறப்புகளை எடுத்துரைக்கிறது. [1]

புத்தகம் வாங்கக்கூடிய இடங்கள்:
நீங்கள் இந்த நூலை பின்வரும் இணையதளங்களில் வாங்கிக் கொள்ளலாம்:

- CommonFolks

- Exotic India Art
- Marina Books

பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்' என்பது தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரரான வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர்களின் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கும் ஒரு வரலாற்று நூலாகும்.

நூலின் சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** இந்த நூலை எழுதியவர் புகழ்பெற்ற தமிழறிஞர் **க. சுப்பிரமணிய பிள்ளை** (ஜெகவீரபாண்டியனார்).
- **வரலாறு:** கட்டபொம்மனின் வீரம், ஆங்கிலேயர்களுக்கு எதிரான அவரது போர், பாஞ்சாலங்குறிச்சியின் பெருமை மற்றும் ஊமைத்துரை போன்றவர்களின் தியாகங்கள் ஆகியவை இதில் உணர்ச்சிகரமாக விவரிக்கப்பட்டுள்ளன.
- **தொகுப்புகள்:** இந்த நூல் பொதுவாக இரண்டு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது.
- **நடை:** தமிழ் மக்களின் மனதில் வீர உணர்வை ஊட்டும் வகையில், செந்தமிழ்ச் சொற்கள் நிறைந்த கம்பீரமான நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

நூல் கிடைக்கும் இடங்கள்:

இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற நூல் தமிழ் இணையக் கல்விக்கழகமின் நூலகத்தில் மின்னூலாகவும், அச்சுப் பிரதிகளாக பொதுவான புத்தக விற்பனை நிலையங்களிலும் கிடைக்கின்றன. இதன் அச்சுப் பிரதிகளை வாங்க CommonFolks அல்லது Udumalai போன்ற இணையதளங்களைப் பயன்படுத்தலாம்.

'வீர தேவதை வணக்கம்' என்பது புகழ்பெற்ற தமிழறிஞ கவிராச பண்டிதர் **ஜெகவீரபாண்டியனார்** (செ. ஜெகவீரபாண்டியன்) எழுதிய ஒரு கட்டுரை/உரைநடை நூலாகும்.

நூல் மற்றும் ஆசிரியர் பற்றிய தகவல்கள்:

- **ஆசிரியர்:** கவிராச பண்டிதர் ஜெகவீரபாண்டியன் (1886–1967). இவர் தூத்துக்குடி மாவட்டம், செய்துங்கநல்லூரைச் சேர்ந்தவர்.
- **சிறப்புகள்:** 'கவிச்சக்கரவர்த்தி', 'தமிழ்மாமணி' போன்ற பல பட்டங்களைப் பெற்றவர். இவரது படைப்புகள் அனைத்தும் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.
- **பிற படைப்புகள்:** இந்நூலைப் போலவே *தமிழர் வீரம்*, *பாரத நாட்டு வீரர்*, *பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்* மற்றும் *கம்பன் கலை நிலை* போன்ற பல வரலாற்று மற்றும் இலக்கிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.

நூலை வாசிக்க:

ஜெகவீரபாண்டியனாரின் படைப்புகள் மற்றும் கட்டுரைகளை நீங்கள் முழுமையாகக் கண்டறிந்து படிக்க, TamilOnline அல்லது Tamil Wiki இணையதளங்களைப் பார்வையிடலாம்.

திருச்செந்தூர் சண்முகக் கடவுள் மீது மாசிலாமணி மாலை:

கந்தர் பதிகம், போற்றி மாலை என்பது தமிழறிஞர் ஜெகவீர பாண்டியனார் எழுதிய திருச்செந்தூர் முருகன் மீதான பக்தி நூலாகும். இந்த நூல் திருச்செந்தூர் முருகனின் புகழைப் போற்றும் பல்வேறு பாடல்களையும் பதிகங்களையும் உள்ளடக்கியது.

கவிராச பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் (1886-1967) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த சிறந்த சொற்பொழிவாளர் மற்றும் பல தமிழ் நூல்களின் ஆசிரியர் ஆவார். அவரது பிற குறிப்பிடத்தக்க படைப்புகள்:

- **திருக்குறட் குமரேச வெண்பா** (13 தொகுதிகள்)
- ***பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்***
- ***கம்பன் கலைநிலை***
- ***தரும தீபிகை***
- ***வீரபாண்டியம்***

ஜெகவீர பாண்டியனார் பற்றிய மேலதிக தகவல்களை தமிழ் விக்கிப்பீடியா மற்றும் தமிழ் விக்கி பக்கங்களில் காணலாம். அவரது அச்சுப் புத்தகங்களை வாங்க Panuval.com மற்றும் CommonFolks போன்ற வலைத்தளங்களைச் சரிபார்க்கலாம்.

நீங்கள் தேடும் நூல் **"கம்பர் கவித்திறம்"** அல்ல, அது **"கம்பன் கலை நிலை"** (Kamban Kalai Nilai) எனும் பெயரில் நாவலர் **ஜெகவீரபாண்டியனார்** எழுதிய புகழ் பெற்ற ஆய்வு நூலாகும்.

கம்பராமாயணத்தில் உள்ள பாத்திரங்கள், காவியச் சுவை, நீதி நெறிகள் மற்றும் கவிஞரின் ஆளுமை ஆகியவற்றை மிக ஆழமாக அலசி ஆராயும் இந்த நூல் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

நூல் பற்றிய தகவல்கள்:

- **ஆசிரியர்:** நாவலர். ஜெகவீரபாண்டியனார்
- **பொருள்:** கம்பராமாயணத் திறனாய்வு மற்றும் கவியின் கவித்திறன் ஆய்வு
- **பதிப்பாளர்:** சி. வரதராஜுலு நாயுடு பிரஸ், மதுரை
-

இந்த ஆய்வுத் தொகுப்புகளின் முழுமையான வடிவத்தை நீங்கள் Tamil Virtual Academy அல்லது Internet Archive வழியாகப் படிக்கலாம்.

கவிராச பண்டிதர் ஜெகவீரபாண்டியனார் எழுதிய **பாரத நாட்டு வீரர்** (அல்லது அது தொடர்பான வீர வரலாற்று) நூல், சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளது:

- **நூலின் பின்னணி:** ஜெகவீரபாண்டியனார், தமிழ்நாட்டின் வீர வரலாற்றை மீட்டெடுத்துப் போற்றுவதில் பெரும்பங்காற்றியுள்ளார். அதன்படி இவர் எழுதிய **"பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்"** மற்றும் **"வீரபாண்டியம்"** ஆகிய நூல்கள் வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் ஊமைத்துரை போன்ற பாரத நாட்டின் தலைசிறந்த சுதந்திரப் போராட்ட மற்றும் விடுதலை வீரர்களின் வரலாற்றை விரிவாகக் கூறுகின்றன.
- **வரலாற்றுப் பின்னணி:** ஜெகவீரபாண்டியனார், தூத்துக்குடி மாவட்டம் ஒட்டநத்தத்தில் கட்டபொம்மன் வழிவந்த குடும்பத்தில் பிறந்தவர்.

பாரத நாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாற்றைப் போற்றும் இவரது **வீரபாண்டியம்** போன்ற புகழ்பெற்ற நூல்களைக் காப்பக இணையதளத்தில் Tamil Digital Library வாயிலாகக் கண்டுகளிக்கலாம். ஜெகவீரபாண்டியனாரின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை தமிழ் விக்கிப்பீடியா பக்கத்தில் அறியலாம்.

அகத்திய முனிவர்

[01] https://archive.org/details/acc.-no.-1156-agathiya-munivar-1933

[02] https://cict.in/cict2023/wp-content/uploads/2025/1-Books/%E0%AE%85%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D.pdf

[03]https://commons.wikimedia.org/wiki/File:%E0%AE%85%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%

AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D.pdf

[04]https://tamildigitallibrary.in/Articles/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B2%E0%AF%8D-1819-%E0%AE%85%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%20%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D

நூல்கள்

- அகத்திய முனிவர்
- திருச்செந்தார் அந்தாதி
- மாசிலாமணி மாலை
- அணியறுபது
- அரும்பொருள் அமுதம்
- இந்தியத் தாய் நிலை
- பாரத நாட்டு வீரர்
- வீர தேவதை வணக்கம்
- உழவும் உலகமும்
- எனது வாழ்வு
- கவிகளின் காட்சி
- தமிழர் வீரம்
- தெய்வப் புலவர்
- பாஞ்சாலங் குறிஞ்சி வீரர் சரித்திரம்
- முருகவேள்
- நமது தாய் மொழி
- உயிரினங்கள்
- உள நிலை
- ஒழுக்கம்
- கல்வி நிலை
- சந்தம்
- தாயின் தகைமை
- மனிதனும் தெய்வமும்
- மூன்று ஒலிகள்
- வீரபாண்டியம்
- வீரகாவியம்
- கம்பர் கவித்திறம்

- கவிகளின் காட்சி தொகுதி - 1
- கம்பன் கலை நிலை - உரைநடை -15 தொகுதிகள்
- தரும தீபிகை - செய்யுள் மூலமும், உரையும் - 7 தொகுதிகள்
- திருக்குறள் குமரசே வெண்பா - செய்யுள் மூலமும், உரையும், அறத்துப்பால்- 4 தொகுதிகள்
- திருக்குறள் குமரசே வெண்பா - செய்யுள் மூலமும், உரையும், பொருட்பால் - 5 தொகுதிகள்
- பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் - 2 பாகங்கள்
- உலக உள்ளங்கள் (மொழிபெயர்ப்பு)

அகத்திய முனிவர்

உ

அகத்திய முனிவர்.

கவிராஜ பண்டிதர்

ஜெகவீரபாண்டியனவர்கள்

எழுதியது.

இரண்டாம் பதிப்பு.

மதுரை,

மதரூஸ் C. வரதராஜுலுநாயுடு பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

 [Price Re. 1-0-0.

1940.

முகவுரை.

இந்நூல், மலர்தலை உலகினுக்கு உயிரென நின்று அவ்வுலகில் பல்புகழ் நிலவ நிலவிய அகத்திய முனிவரது பிறப்பு, இருப்பு, குணம், செயல் முதலிய சிறப்பு நலங்களைத் தெளிவுற வுணர்த்தும் இயல்பினை யுடையது. இஃது உருவில் சிறியதாயினும் பொருளில் பெரியது. இகத்தில் நின்றாரும் பரத்தி லுள்ளாரும் அகத்துள் வைத்துப் போற்றும் மகத்துவ மிகுத்த ஓர் மாதவமணியை மருவியுள்ளமையால் ஆதவன்போல் அருளொளி பரப்பும் மேதக வமைந்தது. பண்டைக்காலத்திருந்த நமது முன்னோர்களுடைய சரிதங்களையும் குணநலங்களையும் ஆராய்ந்தறிதல் நமக்கு இனிமையாயதோர் தனி உரிமையாகும். நமது வாழ்க்கைகளைத் தூய்மைசெய்து உயர் நிலையில் நிறுத்தி உறுதி பெறுதற்கு உயர்ந்தாரது சரித வுணர்ச்சி மிகவும் உதவியா யுள்ளது.

நினைப்பின் வண்ணமே மக்களாகிய நாம் நிலைத்து வருகின்றோம். மேலோர்களுடைய பழக்க வழக்கங்களையும், பான்மை மேன்மைகளையும் நாளும் பயின்று வருவோமாயின் அத்தன்மை நமக்கு மிகுந்த நன்மையாகும். நல்லோர் இயல்புகளைச் சிந்தித்தால் சிந்தை சிறந்து விளங்கும்; அதனால் எல்லா நலங்களும் எளிதில் சித்திக்கும். உள்ளத்தளவே மக்கள் உயர்ந்திருக்கின்றார். ஒருவன் உள்ளம் சிறந்ததானால் அவன் எல்லாரினும் உயர்ந்தவனாகின்றான். அவன் எண்ணிய யாவும் எளிதில் எய்துகின்றான். ''உள்ளியது எய்தல் எளிது'' என்பது வள்ளுவப் பெருந்தகை

வாக்கு. "யாது பாவித்திடினும் அதுவாகி நிற்பை" என்னும் பொருளைப் பொதிந்து வடமொழி நூல்கள் பல படியாக உரை தருகின்றன. களங்கமற்ற நெஞ்சோடு எதனை நேசிக்கின்றோமோ அதனை நாம் கைவரப் பெறுவோம். "What we love that we have" என்பது ஓர் சிறந்த ஆங்கிலப் புலவரின் ஆழ்ந்த கருத்தாகும். எமர்சன் என்னும் அமரிக்க நுண்ணறிவாளரும் இப் புலவரை வியந்து புகழ்ந்திருக் கின்றனர். மன்னுயிர்க்கு ஆக்கமாகிய இம் மன நலமும் இன நலத்தினாலேதான் ஒளிபெற்று உயர்வுறுகின்றது.

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும்" (குறள்)

இனநலம் என்றது குணநல முடைய மேலோரை, இத்தகைய தெள்ளியோ ரெல்லாரும் உள்ளிப்போற்றும் வள்ளலாகிய அகத்திய முனிவரது அரிய சரிதத்தை இந் நூல் இனிது விளக்கி யுள்ளது. இதன் உள்ளுறை நலங்களை யூன்றி யுணர்ந்து உளங்கொண் டொழுகின் உயர்நலம் அடையலாம்.

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியை அழகு பெறச் செய்து இனிய முறையில் உலகில் நிலைபெற வைத்துக் கலைமகளின் தலைமகனா யுள்ள இம் முனிவர் பெருமானது சரித வுணர்ச்சி கலைபயில் மாணவர்க்குப் பெருநலந் தரும் ஆதலால் இதனை அவர் ஓதி யுணர்ந்து உயர் பயனுறும்படி கலைநலம் பேணும் அறிஞர் பெருமக்கள் உதவி யருள்வார்கள் என்று நம்புகின்றேன்.

திருவள்ளுவர் நிலையம்,
மதுரை.

இங்ஙனம்
ஜெகவீரபாண்டியன்.

பொருளடக்கம்.

அகத்திய முனிவர்

நூலின் பயன்.

சிவக்கட லதனில் எழுந்தபன் னிருகைத்
தெள்ளமிழ் தருள்சிறி தடைந்து
புவிக்கடல் குடித்துத் தமிழ்க்கடல் விரித்துப்
புகழ்க்கடல் பெருக்கிய புனிதத்
தவக்கடல் குணத்தின் தனிக்கடல் குடத்தில்
தயங்கிய அருட்கடற் கதையாம்
அவிக்கடல் படிவார் பவக்கடல் படியார்
ஆனந்தக் கடல்படிந் துயர்வார்.
